தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி௵ ஐப்பசி௴ 13உ (29-10-'22.) | ப. 26.

விஷய அடக்கம்.

1. உலக நடை 262
2. அன்போ ஆற்றலோ 263
3. சிச்சியர் பூர்வ சரித்திரம் 265
4. புராதன நீதி ஸ்தலங்கள் .... ,,
5. நாணய நிர்வாகங்கள் 267
6. புயற்காற்று .... ,,

தமிழ் உலகு

ADVERTISEMENT RATES
(PER INSERTION)

Per 1 Page Rs. 9
Per ½ Page Rs. 5
Per ¼ Page Rs. 3

Apply to
The Manager,
'THE TAMIL WORLD'
MYLAPORE.

தமிழ் உலகு

சந்தா விகிதங்கள்
(தபால் கூலி உள்பட)

வருஷம் 1-க்கு ரூபா 5.
வருஷம் ½-க்கு ரூபா 3.

மானேஜர்;
'தமிழ் உலகு'
மைலாப்பூர்.

தமிழர் நேசன்.

சாஸ்திர அறிவைப் பரவச் செய்யும் மாதாந்தப் பத்திரிகை.
இது தமிழர் கல்விச் சங்கத்தால் வெளியிடப்படுவது
பட்டமும் பரிசும் பெற்ற பல மேதாவிகளால் எழுதப்பட்டது. பெண்டிரும் சிறுவர் சிறுமிகளும் படித்தறிதற் பொருட்டு மிகவும் எளிய நடையில் உள்ளது. சாஸ்திர விஷயங்களைத்தவிரப் பல கதைகளையும் குறிப்புகளையும் உடையது.
அநேகச் சித்திரப்படங்களோடு கூடியது.
கல்வி இலாகா டைரெக்டராலும், ஜில்லாபோர்டு தாலூகாபோர்டு தலைவர்களாலும், பள்ளிப் போதகர்கள் பலராலும் ஆதரிக்கப்பட்டது. உள் நாட்டு, வெளி நாட்டுப் பத்திரிகைகளால் புகழப்பட்டது.
வருஷச் சந்தா மூன்று ரூபாய்.

கௌரவக் காரியதரிசி,
தமிழர் கல்விச் சங்கம், மைலாப்பூர்.

உலக நடை

இந்தியர்கள் தொழிற் காப்புக்காக அன்னிய நாட்டுச் சரக்குகளின் பேரில் வரி விதிப்பதைக் கைக்கொள்ளும் விஷயத்தில் பிரிடிஷ் பத்திரிகைகள் பலமான கூக்குரலிட்டுவருகிறது. வரி விதிப்பதால் தொழிற்காப்பென்ற நோக்கம் கைகூடாதாம். இந்தியாவில் அச்சரக்குகள் உற்பத்தி செய்ய இயலாதாம். வரி விதித்தும் சரக்குகள் உள்ளேவந்து அதிக விலைக்கே இந்திய ஏழை ஜனங்கள் வாங்கியே தீருவார்களாம. ஆகையால் இவ்வரி விதிக்காமலிருக்க இந்தியர்களைத் தூண்டுகின்றன. இது ஆடு நனைகிறதே யென்று ஓநாய் அழுவதைப்போல் அல்லாது வேறு எவ்விதம் கூறலாம். இவ்விதமே அமெரிக்கா தேசத்தில் அமுலுக்கு வந்திருக்கும் போர்ட்னீ டாரிப் என்ற தொழிற் காப்பு வரி விஷயத்திலும் தமது கூக்குரலை ஆங்கிலப்பத்திரிகைகள் வெளியிடுகின்றன. அந்தந்த தேசத்தின் அபிவிருத்திக்காக அவரவர்களுக்குத் தோன்றியபடி சட்ட திட்டங்களைச் செய்வதில் வெளி நாட்டாருக்கு ஏன் அவசியமில்லாத கவலை?

போனர்லாவின் தலைமையில் மந்திரி சபை அமைக்கப்பட்டு ராஜ்ய நிர்வாகம் நடைபெறுகின்றது. ராஜ்ய நிர்வாகத்தில் முக்கியமான விஷயங்களைப் பற்றி இப்புதிய முதன் மந்திரியின் போக்கு எவ்விதமென்று பலர் அவருடைய வார்த்தைகளால் தெரிந்துகொள்ள முயன்று வருகிறார்கள். நமக்கும் நம் இந்தியா விஷயமாய் ஏதாவது சௌகரியங்கள் வரப்போவதா வென்று ஆவலுடனிருக்கிறோம். ஏனெனில் இப்பிரதம மந்திரி ஸ்தானத்திற்கு அவ்வளவு கௌரவமிருக்கிறது. அப்பதவியிலிருப்பவர் இட்டது சட்டம். இவர் வாயிலிருந்து வார்த்தைகள் வெளி வந்திருப்பவை வெகு ஸ்வல்பமே; விஸ்தரமாய் இவருடைய பூர்வீகமாகிய கிளாஸ்கோவில் பேசப்போகிறாராம். உலகத்திற்கே அமைதி தேவையாம். ஆகவே இருப்பனவற்றை காப்பாற்றப்போகிறாராம். சிலகாலம் வரை நீடித்து இவைகளே நிகழவேண்டுமாம். புதியன கைக்கொள்ளக் கூடாதாம். இவ்வார்த்தைகளை நம் இந்தியாவுக்கும் நம் நேயர்கள் உபயோகப்படுத்தி புதிய முதன் மந்திரியின் மனோபாவத்தை தெளிவாய்த் தெரிந்து கொள்ளலாம்.

ஜனங்களின் மனோபாவங்களை யறியாது, ஸபைகளைக் கூட்டி அவர்கள் முன்னிலையில் அவர்களுடைய எண்ணங்களுக்கு மாறாக உபன்னியாசம் செய்வோர், கடைசியில் அவர்களால் இகழப்பட்டு வருந்துவானேன்? ஜனங்கள் துஷ்டர்களென்றும் பெரியோரை மரியாதை செய்து, வரவேற்று, அவர் புகட்டும் நீதியை செவி கொடுத்துக் கேட்காத பாபிகளென்றும் தூஷிப்பதற்காகவோ? பல தடவை பட்டும், இப்பெரியோரே கற்றுக்கொள்ளவில்லையே! சாதாரண ஜனங்கள் தாங்கள் அநுபவத்தால் நியாயமெனத் தீர்மானித்த கொள்கையை சுலபத்தில் மாற்றமாட்டார்கள். அவர்கள் எதிரில் எப்பெரியோராயினும் வேற்றபிப்பிராயங்களைச் சொல்லும்போது வெகு ஜாக்கிரதையுடனே நடந்துகொள்ளவேண்டும். இதே முக்கியமான உலக நீதி.

கிலாபத் சங்கத்தார் டில்லியில் கூடி தீர்மானித்த தீர்மானங்களில் ஒன்றுவது; உலகத்திலுள்ள எல்லா முஸ்லீம்களும் ஒன்று சேர்ந்து முஸ்லீம் மத க்ஷேத்திரங்களாகிய மெஸபொடேமியா, பாலஸ்தீன், ஸிரியா, முதலியவை யெல்லாம் முஸ்லீம்களுக்கு முழுமையும் ஆதீனமுள்ளதாக ஆகிற வரை, தங்கள் இயக்கத்தை நடத்தி வரவேண்டியதென்றும். மாஜி மந்திரியான லாயிட் ஜியார்ஜே கிருஸ்துவ மதத்தை முன்னிட்டுப் போர் செய்த தங்கள் முன்னோரை சுட்டிக்காட்டி, துருக்கியுடன் போர் புரியத் தூண்டியிருக்கையில், கிலாபத் சங்கத்தார் தீர்மானித்தது முழுமையும் நியாயமாகாதோ?

ஜர்மனி ஏழையாய் வெகு பரிதாப நிலையிலிருக்கிறது; மகாயுத்த நஷ்ட ஈடுகளை இட்ட தவணைப்படி செலுத்தக் கூடவில்லை. பிரிடிஷார் அதிக நிர்பந்தம் செய்யாதிருந்தும், ப்ரஞ்சுக்காரர்கள் ஜர்மனியில் தொழிற்சாலை முதலியவற்றை தங்கள் வசப்படுத்திக்கொண்டு நஷ்ட ஈடுகளை எவ்விதத்திலும் முதலில் பற்றிக்கொள்ள வேண்டுமெனக் கூறுகிறார்கள். ஏழைக் கடனாளிகளிடம் கடன்காரர்கள் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டும் என்பதை ப்ரஞ்சுக்காரர்கள் அறிந்துகொள்ளவில்லை. இப்போதே ஜர்மனியில் ராஜாங்கப் புரட்சிக்குள்ள அறிகுறிகள் காண்கின்றன. பக்கத்திய தேசத்தில் சண்டை சச்சரவுகள் நிகழ்ந்துகொண்டு அமைதிபற்றிருந்தால் ப்ரான்ஸுக்கு யாது நேரும் என்பதை ப்ரஞ்சுக்காரர்கள் உணரவில்லை.

நமது ராஜப்பிரதிநிதி லார்ட் ரெடிங் தன்வேலையை ராஜீநாமா செய்யப்போவதாக பலமான வதந்தி இருந்துவருகிறது. பிரிடிஷ் மந்திரிசபை மாறுதலோ அல்லது வேறு எதாவது மனஸ்தாபங்களோ காரணமில்லையாம். இரண்டே வருஷங்கள் தான் இப்பதவியை வகிப்பதாக ஏற்பாடாம். இருந்தவரையில் ஜனங்களுக்கு நீதியைச் செலுத்திவர எண்ணங்கொண்டு ராஜ்ய பரிபாலனம் செய்துவந்தார். நமக்கு சுயராஜ்யம் கிடைக்கவில்லை யென்பது இவர் செய்த குற்றமோ. பிரிடிஷ் மந்திரி சபைக்குட்பட்டே இவர் தன் காரியங்களைச் செய்துவரவேண்டுமென்ற ஓர் பொறுப்பு இவருக்கு இல்லையோ!

அகாலியர்களின் சாத்வீகப் போராட்டத்தை நோக்கும்போது, மதஸ்தாபனங்களை மகந்துவின் இஷ்டப்படி அநியாயமாய் உபயோகிக்காமல் தடுப்பதற்கு துவங்கிய போராட்டம் கடைசியாய் இப்போது அதிகாரிகளின் அநியாயமான பிடிவாதத்தை யெதிர்த்து நடக்கும் போராட்டமாக முடிந்தது. பஞ்சாப்பில் ஜனங்களுக்கு அதிகாரப்பே பிடித்த அதிகாரிகளிடத்தில் பிரியமின்மை வெகு காலமாய் இருந்து வருகிறது. பிரஜைகளுடைய க்ஷேமமும், அவர்களிடத்து அன்பும் நோக்கமாக உடைய அரசாங்கத்தாருக்கு தாங்கள் பலம் படைத்த அதிகார முடையவர்கள் என்பதைக் காரணமில்லாமல் வெளிக்காட்ட முன்வருவது தகுமோ? அதிகாரப் பேய் பிடித்து உழலும் அரசாங்கத்தாரைச் சுற்றி வெறிபிடித்தவர்களைச் சுற்றிக்கூடும் கூட்டத்தைப்போல் ஜனங்கள் கூடமாட்டார்களோ?

அன்போ ஆற்றலோ?

மேல் நாட்டில் நடந்த பெரும் போரையும் பிறகு நடக்கும் சச்சரவுகளையும் நினைத்துப் பார்க்குந்தோறும், உலகின் இயல் அன்போ ஆற்றலோ என ஐயமுண்டாயிற்று. இதைத்தீர்க்க நினைந்து உலகைத் தாங்கிநிற்கும் ஆதிசேஷனை யடையும் பொருட்டு செல்லுங் காலத்தில், வழியில் ஹயக்கிரீவ வனத்தை யடைந்தேன். அங்கு நான் காணாததோர் புதுமை கண்டேன். ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத எலிமுதல் புலிவரையிலுள்ள மிருகங்களும் குருவிமுதல் கழுகுவரையிலுள்ள பட்சிகளும் கூடி நின்றன. எனக்கு விலங்குகளிடத்தும் பட்சிகளிடத்துமுள்ள பட்சபாதத்தால் பிரயாணம் தடைப்பட்டு நானும் அக்கூட்டத்தின் அருகில் சென்றேன். அந்த ஸமாஜத்தின் முன்புறத்தில் ஒரு சிறு மேடையின்மீது நீண்ட காதுகளும் வெளுத்தமூக்கும் மயிர் செறிந்த மேனியுமுடைய நெடுங்காதரென்னும் கழுதையொன்று நின்றது. அதுவும் தலையை இருபுறத்திலும் மெல்லெனத்திருப்பி தன் அழகிய வாலையசைத்து முன்கால் குளம்பினால் தரையை தட்டிக்கொண்டு பேச ஆரம்பித்தது.

நெடுங்காதர்: அழகும் ஒழுக்கமும் வாய்ந்த தோழர்காள், இச்சாந்த ஸமாஜத்தில் தலைமை நடத்தும்படி என்னை நியமித்ததற்குக் காரணம் பலவிதமாய் யோசித்தும் எனக்கு விளங்கவில்லை. என்னிலும் பராக்கிரமும் புத்தியும் பெற்ற பெரியோர்களை விட்டு என்னை இக்கௌரவத்தை வகிக்கச்செய்தது சரியல்லவென்று தோன்றுகிறது. ஆனால் தீர்க்கமாய் யோஜித்துப் பார்க்குமிடத்தில் எனக்குப் பிறரிடத்திலுள்ள அன்பு காரணமாகயிருக்குமென்று தோன்றுகிறது. மற்றவர்களைப் போலல்லாது பரஹிம்ஸையை முற்று மொழித்தவனாதலால் இச்சாந்த ஸமாஜத்திற்குற்ற தலைவனாகுமெனத் தெரிந்தெடுத்திருக்கலா மென்றிருக்கிறேன். அதுவும் உங்களுக்கு ஆற்றலைக்காட்டிலும் அன்பிலுள்ள நம்பிக்கையை வெளிபடுத்தியது. இதுவே இந்த சாந்த ஸமாஜத்தின் விருத்திக்கேற்ற அடையாளமாகும். (ஸபையோர் சந்தோஷக் கூச்சலிட்டார்கள்.) நண்பர்களே, நமது உண்மையான நிலைமையையும் நம்மைபற்றி பிறர் நினைவும் அறிந்துகொண்டு நடப்பதே யறிவிற்கடையாளமாகும். உள்ள நிலையறியாது நமக்குள் ஏற்பட்டிருக்கும் சில்லரைக் கலகங்களையே ஆராய்ந்து உலகின் இயல்பைப்பற்றிய சாஸ்திரமெழுதப்புகுந்த மாந்தர்கள் ஜீவராசிகள் ஒன்றுக்கொன்று போராடியே பிழைக்கின்றனவென்றும் ஆற்றலே உய்வதற்காதாரமென்றும் தீர்மானித்திருக்கிறார்களாம். இவர்களையும் உண்மையறிந்தோரெனக் கூடுமோ? இவர்கள் உலகத்தில் ஜீவராசிகளின் உற்பத்திக்குக் காரணம் காதல் என்பதை கவனித்தாரில்லையே! பின்னும் வளர்வதெல்லாம் தாயின் அன்பாலன்றோ! போராட்டமில்லாது வாழும் மிருகங்களே பெரும்பாலும் விருத்தியடைந் திருப்பதையும் விசாரித்திலரே! நல்லது, இவர்கள் சொல்லுவது மெய்யானால், ஆற்றலிலும் அறிவிலும் சிறந்த மிருகங்கள் அதிகரித்திருக்கவேண்டுமே. புலிக்கூட்டம் பெரியதோ, எலிக்கூட்டம் பெரியதோ பாருங்கள். யானைகளதிகமோ, ஆடுகளதிகமோ? இதுகளைக் கவனியாது சாஸ்திரமெனப் பெயரிட்டு கூறும் மொழிகளைக்கேட்டு நாம் போராடுவது தகுமோ? ஒன்றையழித்து ஒன்றுய்யவேண்டுமென்கிறார்களே அதை விசாரிப்போம். தன்னுடலைக் கொடுத்து மக்களை வளர்ப்பது அன்பின் மிகுதியோ வேறோ? உலகியல் அன்பே யென பூர்ணமான நம்பிக்கையுடன் கருதியதால் புல் பூண்டுகளைக் கூடக் காய்ந்தபிறகே நான் அருந்துகிறேன். கலங்கிய தண்ணீரில் ஜீவராசிகளுள்ளனவென்று தெளிந்த தண்ணீரையே குடிக்கிறேன். நான் யாரிடத்திலும் முகங் கொடுத்துப் போராடுவதில்லை. பிறருக்குபகாரமல்லாது ஒரு பொழுதும் அபகாரம் செய்வதேயில்லை. இக்காரணங்களைக் கொண்டு பிறர் என்னை யவமதிப்பார்களே யென்று நான் விசனப்படுவதில்லை. உலகத்தினியல் அன்பே யென்று காட்டவேண்டுமென்பதே யெனது எண்ணம். நீங்கள் எல்லாரும் இவ்வாறே யொழுகுவதினால் உலகத்திற்கே பெருத்த க்ஷேம முண்டாகுமென்பதில் ஐயமில்லை; என்று சொல்லி முடித்தவுடன் எல்லா மிருகங்களும் ஒன்று சேர்ந்து கூச்சலிட்டன.

பிறகு பெருந்தலைய ரென்னும் புலி யெழுந்து கம்பீரமாய் நடந்து முன்னுக்கு வந்து, உடலை நிமிர்த்து, வாலை சுழற்றி யடித்து, பெருங்குரலெடுத்துப் பேசிற்று.

பெருந்தலையர்: பிரிய சகோதரர்களே, இப்பொழுது பல நூல்களை யாராய்ந்து கல்வியிற் சிறந்தவராய் விளங்கும் நெடுங்காதர் கூறிய மொழிகள் என் மனதைக் கவர்ந்து கொண்டது. உலகத்தில் புலி பசித்தால் புல்லைத்தின்னாது என்று பழமொழியுண்டு. அதைக்கூட பொய்யாக்கி புல்லையே தின்று ஜீவிக்கவேண்டுமெனக் கூறுபவர் எம்முடைய நிஜமான சுபாவமறியாதவர்களே. எம்மவருக்கு பரஹிம்சையில் இச்சை கிடையாது. இரை வேண்டிக்கூட கொல்லுவது வழக்கமில்லை. நாங்கள் எப்பொழுதும் புல்லடர்ந்த இடங்களில் படுத்துத் தூங்குவது வழக்கம். அப்படித்தூங்குகையில், அங்கு ஆடு மாடுகள் புல்லை மேயவந்து செய்யுமுபத்திரவம் பொறுக்காது. அவைகளை யடித்தால் அவைகளும் இறந்துவிடுகின்றன. பிறகு அவைகளின் உடல்கள் வீணாகாதிருக்கும் பொருட்டு தின்றுவிடுவது வழக்கம். கொல்லவேண்டுமென்பது எமது கருத்தல்ல. தானாயிறந்த பிராணிகளைத் தின்று காலங் கழிப்பதில் கொஞ்சமேனும் ஆக்ஷேபனையில்லை. இப்பிணங்களைத் தேடி ஆடுமாடுகளிருக்கும் மந்தைகளருகில் நாங்கள் வரும்போதே அவைகள் பயந்து எம்மை யெதிர்க்க ஆரம்பிக்கின்றன. நாங்களும் வீர சுபாவத்தினால் போரிட்டுக் கொல்லவேண்டிவருகிறது. சாமான்யமாய் எம்மைக் கண்டு பயப்படாது, எங்களை இறந்த பிராணிகளை யெடுத்தேகும்படி விட்டால், எம்மால் ஒரு இடைஞ்சலும் உண்டாகாது. உலகினிடத்தில் எமக்கும் அன்பு குறையாது. இவ்விதமாக எல்லாரும் சேர்ந்து தீர்மானிப்பீர்களென நம்புகிறேன்; என்று கூறியுட்கார்ந்தது:

உடனே நீலமேகம் போன்று மயிர்களடர்ந்த உடலோடு கூடிய கரடிக்கிறைவனாகிய சாம்பவன் எழுந்து நின்று உருமத் தொடங்கிற்று.

சாம்பவன்: இராம், இராம், பக்த சிரோமணிகளே, உலகினியல் அன்பே யென்றறிந்து ஆற்றல் கொண்ட அரக்கக் கூட்டத்தை யெல்லாம் அழிக்கும் விஷயத்தில் பகவத் அவதாரமாகிய ஸ்ரீராமனுக்கே எம்மவர்கள் செய்த உபகாரம் மறக்கற்பாலதோ? எம்மவர்களையும் குரூர சுபாவமுள்ள

வர்களெனக் கூடுமோ? உண்மைக் காரணங்களறியாதார் நாங்கள் எரும்புப் புத்துகளில் வாயை வைத்து எரும்புக்கூட்டங்களை யொருங்கே யுண்டுவிடுகிறோமென்றிகழ்ந்து கூறுகிறார்கள். ஆதிமுதல் எம்மவருக்கு இராமனிடத்தில் உள்ள பக்தி மிகுதியால் இராம நாமத்தையே ஜீவனமாக வைத்திருக்கிறோம். அவ்விராமனது பிரபாவத்தை முற்றிலும் முணர்ந்தவர் வால்மீகி முனிவராகையால் அவரிடத்திலும் எங்களுக்கதிகமான அன்புண்டு. அது காரணமாக புத்தைக் கண்ட பொழுதெல்லாம் அங்கு வால்மீகி யிருப்பாரென எண்ணி அங்கு சென்று அவர் ஸமாதியிலிருப்பவராகையால் வாயை புத்தின் முகப்பில் வைத்து இராம நாமம் செய்தால் அவர் வெளிவந்து தரிசனம் கொடுப்பாரென்று நினைத்து அவ்வாறு செய்கிறோம். அக்காலத்தில் புத்திலிருக்கும் எரும்புகள் வழி தெரியாது எம் வாயுட் புகுந்து விடுகின்றன. அவைகளை நாங்கள் உண்டு விடுதலல்லாது வேறு செய்யும் வகையுமுண்டோ! இதுவும் குரூரமாகுமோ! எங்கள் ஆற்றலைப் பிறருக்கு ஹிம்சை செய்ய உபயோகிப்பதேயில்லை. நல்லது, நாங்கள் இவ்வாறு செய்வதனால் எரும்புகள் குறைந்துவிட்டனவோ? இராம், இராம்; என்று சொல்லி நிறுத்தியவுடன் பெரிய கருத்த எலி யொன்றெழுந்து முன்னுக்கு வந்து தனது சிறிய காதுகளை விரித்துப்பேச ஆரம்பித்தது.

எலி: பிரிய சகோதரர்களே, முன்னரே கல்வியிற் சிறந்த கழுதையார் உருவிற் சிறியவரானாலும் கூட்டத்தில் நாங்கள் பெரியவரெனக் கூறினார். அவ்வாறிருப்பதும் எமக்கு உலகிலுள்ள அன்பு காரணமாக வந்ததென்றும் கூறினார். எமது பல்லின் வலியைக் கொண்டே பிறர்களடையக்கூடாத பல விடங்களில் சென்று உணவு சம்பாதிக்கும் எங்களைத் தடுத்தொழிக்க எண்ணி உருவினாலும் புத்தியினாலும் சிறந்த பூனைகள் அவர்களிருக்குமிடங்களில் எம்மை யணுக வொட்டாமலடிக்கின்றன. இதுவும் தருமமா? அவைகளுக்கும் எம்மால் கெடுதி யுண்டோ? உலகத்தில் பூனையிருக்கிற விடத்திலேயே எலி பேரன் பேத்தியெடுப்பது வழக்கமென்று சொல்வதைக் கேட்டதில்லையா? அப்படிக்கிருக்க நாங்கள் பூனைகள் இருக்குமிடத்திற்கே வரக்கூடாதென்று தடுப்பதும் நீதியோ? இப்பூனைகளுக்கென்ன காணியாட்சி வந்துவிட்டதா? உலகம் எல்லாருக்கும் பொது என்பதையும் அவர்கள் மறந்து விட்டனரே. அவர்கள் உற்பத்தியான காலத்திற்கு முந்தியே நாங்கள் உற்பத்தியாயிருக்கவில்லையா? இதுகளையெல்லாம் ஸமாஜத்தார் விசாரித்துத் தீர்மானம் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இது செய்யாத விஷயத்தில் எலிகளெல்லாம் சேர்ந்து பெரிய கலகமிடுமென்பதில் ஐயமில்லை; என்று வெகு விநயத்தோடு கூறி நிறுத்தியவுடன் பூனையொன்று எழுந்து முன்வந்து கண்களை மூடிக்கொண்டு பேசத் தொடங்கிற்று.

பூனை: நண்பர்களே, இப்பொழுது எமது பிரியர் கூறிய மொழிகள் என் மனதிலடங்காத்துயரை விளைவிக்கின்றன. எம்மவருடைய சாந்த சுபாவம் இந்த ஸமாஜத்தாரறியாததல்ல. நாங்களொருபொழுதும் எலியர்களையோ மற்றவர்களையோ கொல்லவேண்டிய அவசியமில்லை. பூனைக்குப் பாலில் பிரியமென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அதையே ஆகாரமாக நாங்கள் வைத்திருக்கிறோம். அதைக் கெடுக்க எண்ணி பிரயத்தினப்படுவதால் அவைகளைத் தடுக்கவேண்டி வருகிறது. எங்களுக்குப் பால் கொடுக்கும் ஆடுகளுக்கும் மாடுகளுக்கும் உணவாகிய தானியப் பயிர்களையும் தானியங்களையும் நாசப்படுத்துவதைக் கண்டு மனம் பொறாமல் எலிகளை யழிக்கவேண்டி வருகிறது. இதனால் நாங்கள் குரூரர்களெனவும் கூடுமோ? நாங்கள் வாழுமிடங்களிலவர்கள் வராதிருந்தால் இவர்களுக்கு கெடுதியும் நேரிடுமோ? எமக்கும் தீங்கு விளையாது. இதுகளைக் கவனிக்கவேண்டும். எலியர்களுக்குக் கொஞ்சம் இடங்கொடுத்துவிட்டால், அவர்கள் தங்களுடைய கெட்ட சுபாவத்தைக் காட்டி பிரஜைகளை ஜாஸ்தியாய் விருத்திசெய்து எம்மவருக்கடக்க வொண்ணா இடையூறியற்றுகிறார்கள்; இவ்வாறு மெல்லென மொழிந்து நிறுத்தியவுடன் அருகிலிருந்து பறந்துவந்ததொரு கழுகு முன்னின்று மொழிவதாயிற்று.

கழுகு: மனதிற்கினிய மைந்தர்காள், இதுகாறும் இச்சமாஜத்தில் பேசிய விஷயங்களைக் கேட்டானந்தம் கொண்டேன். முதலில் ஜீவராசிகள் ஒன்றுக்கொன்று போராட்டமின்றி வாழ வேண்டுமென நெடுங்காதர் கூறிய மொழிகளைக் கேட்டு மனம் சிறிது கலங்கினேன். மற்றையவர்கள் கூறிய மாற்றங்களைக் கேட்டு அக்கலக்கம் நீங்கிவிட்டது. உங்களெல்லாரைப் பார்க்கிலும் நெடுங்காலமாக நான் ஜீவித்திருப்பவன் என்பது தெரிந்த விஷயமே. உலகிலுள்ள போராட்டத்திலேயே எமக்கு ஜீவனமென்பது தெரிந்திருக்கலாம். அப்போராட்டம் நின்றுவிட்டால் எமக்கு உணவு கிடைப்பதரிதாகிவிடும், என்பதைக் கருதி அதை நிவர்த்திக்கும் மார்க்கம் தேடிவைத்திருக்கிறேன். ஒருபோதும் உலகில் பகை யொழியாது. அப்படிக் கொருவேளை யொழிந்துவிட்டால், அக்காலத்தில் எமக்குணவளிக்கு முபாயமொன்று தவமுயற்சியால் ஸம்பாதித்து வைத்திருக்கிறேன். எமக்கு ஆதி புருஷனாகிய அருணனுடைய உபதேசத்தால் பெரும் பாம்புகளின் வாயிலுள்ள விஷப்பைகளை யெல்லாம் சேர்த்து மந்திரபூர்வகமாய் மேலிருந்து பிரயோகம் செய்தால், அது விழுந்த விடத்தில் ஐந்துமைல் சுற்றளவிலுள்ள பிராணிகளெல்லாம் மறித்துவிடும். அப்பொழுது பிரயாசையன்னியில் யெமக்கும் உணவு கிடைக்கும். உலகினிடத்தில் எமக்குள்ள அன்பினாலேயே இம் மந்திரத்தை யுபயோகிப்பதில்லை. பிராணிகள் போராட்டந்தவிர்த்து இருக்கும் வரையில் கெடுதியில்லை. அது வொழிந்தால் நாங்கள் இம் மந்திரப் பிரயோகம் செய்யவேண்டி வரும்; இதை நன்றாய் கவனியுங்களெனச் சொல்லிப் பறந்து போய்விட்டது.

இதைக்கேட்ட அங்கிருந்த மிருகங்களெல்லாம் பயந்து கூச்சலிட்டு கலைந்தோடின. நெடுங்காதரொருவர் மாத்திரமே அருகிலிருந்த குட்டிச்சுவரண்டைபோய் ஆலோசனை செய்து நின்றார். அவரது மனஸ் ஸமாதானத்தைக் கண்டு வியந்து அதை மாற்ற எண்ணமில்லாதவனாய்த் திரும்பி வீடுசென்றேன்.

சீக்கியர் பூர்வ சரித்திரம்

(R. பஞ்சாபகேசன்)

சீக்கியர் என்ற பதத்திற்கு சிஷ்யர் அல்லது சீஷர் என்பது பொருள். நானக் என்பவரை குருவாய்க் கொண்டவர் சீக்கியர் எனப்படுகிறார்கள். சீக்கியர்கள் சாகீயதாரி, கேசதாரி யென இருவகுப்பினர். இருவரும் சீக்கிய குருக்களுடைய பரம்பரையும் போதனைகளையும் போற்றினாலும் கொள்கைகளில் சிறிது பேதம் பாராட்டுபவர். ஆரோரா, ஜாத், ராம்கிரியர் ஆகிய மூன்று ஜாதிகளிலிருந்து ஜனங்கள் இம்மதத்தைத் தழுவ முன்வந்தார்கள். ஆரோரா ஜாதியினர் வியாபாரத்தைக் கைக்கொண்டவர்கள். ஜாத் நிலம் உழுது ஜீவிப்பவர்கள். ராம்கிரியர் தொழில் வேலைகளிலமர்ந்தவர்கள்.

முன் காலத்தில் பிராமணர்கள் கணக்கற்ற யாகங்களைச் செய்துவந்த நாளில், புத்தர் தோன்றி, ‘ஜீவஹிம்ஸை செய்யலாகாது’ என்ற கொள்கை அடிப்படை பூண்ட மதத்தை ஸ்தாபித்தனரோ, அவ்விதம் சில நூற்றாண்டுகளுக்கு முன், சீக்கிய மதம் ஜீவஹிம்சை, அந்தர சுத்தி யில்லாத வெளிவேஷம் இவைபோன்றவைகளை அகற்ற முற்பட்டது. இதற்கு முன்னதாக நன்னடத்தைகளால் வழிகாட்டிய சில மஹான்கள் அவதரித்தனர். கீத கோவிந்த மியற்றிய ஜயதேவரும், மனமுவந்த பக்தி பொருந்திய ராமாநந்தரும், கருணைவடிவமாக விளங்கிய கபீரும், தாங்கள் சுயநலம்பாராட்டாத முனிவர்களென்று யாவரும் போற்றத்தக்க குணங்களால் உலகத்தையே சீர்திருத்தவந்த அவதார புருஷர்களாக விளங்கினர். ஆனால் ஹிந்து முகமதிய மததத்துவங்களில் இவர்கள் யாதொரு திருத்தமும் கருதவில்லை. ஆனால் இம்மதங்களிடம் சாஸ்திரங்களை அவைகளின் நோக்கங்களைத் தெரிந்து கொள்ளாது போற்றுபவர்களின் ஆசாரங்களை கவனிக்கையில் பல துராசாரங்களாக மாறி வெறுக்கத்தக்கனவாயிருந்தன. இச்சமயத்தில் காத்ரி ஜாதியைச் சேர்ந்த நானக் என்பவர் விக்கிராராதனை முதலிய வெளிக்காரியங்களில் யாதொரு பிரயோஜனமுமில்லையென்றும், மனதில் பாப சிந்தையில்லாமல் சுத்தமாயிருக்கவேண்டுமென்றும், ஸர்வ வியாபியாகிய ஒரே ஈசுவரன்தான் உலகத்துக்கெல்லாம் என்றும் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற ஜாதிவித்தியாசம் கிடையாதென்றும், தீர்த்த யாத்திரை நதிஸ்நானம், உடன்கட்டையேறுதல் இவைகள் பயனற்றதெனவும், அஹிம்ஸை, நியாயம், உண்மை, பெரியோருக்கு கீழ்ப்படிதல், கட்குடி விலக்கல் முதலிய நற்குணங்கள் பெற்று ஒழுகுதலே எல்லாவற்றிலும் மேலானதென்றும் பல தத்துவங்களைப்புகட்டி ஓர் மதத்தை ஸ்தாபித்தார். இவரைப் பலர் பின்பற்றலானார்கள். இவருக்குப்பின் ஒன்பது குருக்கள் இம்மதத்தை பரப்பி வந்தார்கள். அக்காலத்தில் மொகலாய ராஜ்யம் செழிப்புற்று உன்னத தசையிலிருந்து வந்தது. அக்பர் சக்கிரவர்த்தி ஹிந்துக்கள் முதலிய அன்னிய மதஸ்தர்களிடம் கருணை பாராட்டி மதப்பேயில்லாது வந்ததால், அவர் காலம் வரை சீக்கியர்கள் மத விஷயமாய் தற்காப்புக்காகவோ அல்லது மதத்தை பரவுவதற்கோ யாதொரு விதத்திலும் பலத்தை உபயோகிக்காமல் நடைத்தையில் ஸாதுக்களாக வீரியத்தைக் கைக்கொள்ளாது நடந்து வந்தார்கள். மூன்றும் குருவாகிய அமரதாஸ் புகட்டிய நீதியாவது: ‘உங்களை யாராவது அநியாயமாய் ஹிம்ஸித்தால், அதைப்பொறுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் மூன்று தடவை பொறுப்பீர்களாயின், கடைசியில் உங்களுக்காக கடவுளே முன்வந்து சத்துருக்களை தண்டிப்பார்.’ நான்காம் குரு பெயர்பெற்ற ராம்தாஸ் என்பவர். ஐந்தாம் குருவாகிய அர்ஜுனதாஸ் என்பவர் முன்கூறப்பட்டுள்ள எல்லா மதக்கோட்பாடுகளையும் சேர்த்துக் கோர்வையாக இயற்றினார். இது ஆதி கிரந்தம் என்ற பெயரடைந்து சீக்கியர்களுக்கு வேதம் போன்றது. இவர் காலத்தில் மொகலாயர்களுடைய துன்பம் அதிகமாகவே, சாகும் தருணத்தில், மதத்தை முன்னிட்டு தற்காப்புக்காக சீக்கியர்கள் இனி பலம் படைத்திருக்கவேண்டுமென மொழிந்து இறந்தார். அவ்விதமே அடுத்த குருவாகிய ஹார் கோவிந்தர் காலத்தில் போர்வீரர்களாக சீக்கியர்கள் மாறினார்கள். கடைசி குருவாகிய குரு கோவிந்த சிங்கர் என்பார் சீக்கியர்களுக்கு பராக்கிரமத்தை முதன்மையாக வைத்து மதத்திற்கு கடைசிவரை போராடுந்தன்மையை விருத்தி செய்தார். ‘கால்ஸா’ என்று தங்கள் கூட்டத்தாருக்குப் பெயரிட்டு, நியாயம், உண்மை இவைகளை கடைபிடித்து, உபநயனம் பெற்ற சீக்கியர்கள் ஸிம்ஹமென்றுரைக்கப்பட்டு, சகோதர பாவம், ஸமத்துவம் என்ற குணங்களை யாவருமுணர்ந்து அங்கீகரிக்கும்படி செய்தவர் இவரே. பிறகு போர் வீரர்களாக பிரிடிஷ் அரசாங்கத்துடன் போராடின விஷயங்களெல்லாம் நமக்குநன்றாய்த்தெரிந்ததே. இவர்களில் அகாலியர் என்ற பெரும் பகுதியினர் சண்டையில் தங்கள் பிடியை விடாது போர் செய்யும் தீரர்கள். மதவிஷயத்தில் உயிரையும் அல்பமாக மதிக்கும் தன்மை வாய்ந்தவர்கள். அதிகப் படிப்பு இல்லாது போனாலும், தர்மம், நியாயம், உண்மை, தன்னடக்கம் முதலிய அரிய குணங்கள் பெற்றவர்கள்.

புராதன நியாயஸ்தலங்களும் அவைகளின் நடவடிக்கைகளும்

(ஸ்ரீமான் S.V. கோபாலகிருஷ்ணய்யர் M.A.M.L.)

இந்த ஹிந்து நியாயஸ்தல விஷயத்தைப் பற்றிய விவரங்கள் வடமொழியிலிருக்கும் “ஸ்ம்ருதி” நூல்களிற் காணப்படுகின்றன. அவைகளில் முக்கியமாய் “மநுஸ்ம்ருதி, நாரதஸ்ம்ருதி, யாஜ்ஞவல்க்யஸ்ம்ருதி” என்ற மூன்றிலும் நியாயஸ்தலங்களுடைய வருணனை மிகுதியாய்க்காணப்படுகிறது.

ஸ்ம்ருதிகளிற் சொல்லியிருப்பதை ஆராய்ச்சி செய்யுமுன் “ஸ்ம்ருதி” என்றாலென்ன வென்பதை அறிந்து கொள்வது தகுதியாகும். வடமொழியார் தர்மம் என்றும், தென்மொழியார் “அறம்” என்றும், சொல்லுவதொன்றை அறிவதற்கு நான்கு வழிகள் உண்டு என்பது வடமொழி நூல்களின் கொள்கை. அவைகளாவன, ‘வேதம்’, ‘ஸ்ம்ருதி,’ நல்லோரின் ஒழுக்கம், நன்கறிந்து மேம்பட்டோரின் மனத்தோற்றம். இவைகளுள் வேதம் மானிடரால் செய்யப்படாத தென்பதும், அது பரம்பொருளின் வாக்கென்பதும் கொள்கை. அவ்வாக்கை ஆதிக்கால ரிஷிகள் கேட்டு அவ்வப்போது எழுதியுள்ளார். அதனாற்றான் வேதத்திற்கு

'சுருதி' யல்லது 'கேட்கப்பட்டது' என்று வடமொழியில் ஒரு பெயரும் உண்டு.

ஸ்ம்ருதி நூல்கள் ரிஷிகளால் கூறப்பட்டவை. அவைகள் வேதங்களுக்குப் பிற்காலம் வந்தன. வேத வாக்கையே அனுசரித்து எழுதப்பட்டவை. வேதத்தில் சொல்லப்படாத விஷயங்களையும், அங்கு சொல்லப்படினும் பொருள் தெளிவாகாமல் இருக்கிற விஷயங்களையும் பற்றி அவை கூறுகின்றன. 'ஸ்மரணம்' அல்லது ஞாபகத்திலிருந்து எழுதப்பட்டதால் அவைகளுக்கு "ஸ்ம்ருதி" களென்று பெயர். கேட்கப்பட்ட விஷயங்களில் ஞாபகத்தில் தங்கிய சில விஷயங்களை அவை கூறுகின்றனவென்பது பொருள். ஸ்ம்ருதிகள் அநேகமுண்டு. இப்பொழுது சற்றேறக்குறைய 128 ஸ்ம்ருதிகள் இருக்கின்றன. இவைகளிற் சில சூத்திர நடையில் எழுதப்பட்டுள்ளன; சில செய்யுள் நடையிலுள்ளன. முக்கியமாய் மநு ஸ்ம்ருதியும், யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதியும் பெயர் பெற்றவைகள். இரண்டும் செய்யுள் நடையில் தான் இருக்கின்றன. இரண்டும் நான்கு வருணத்தாரும், தாம் பிறந்தது முதல் இறக்கும் வரை செய்யவேண்டிய காரியங்களை எல்லாம் எடுத்துசொல்லுகின்றன. ஆனால் மநுஸ்ம்ருதி, சொல்லும் விஷயங்களை மிகவும் விரிவாய்க்கூறியும் நூலமைப்பிலும் விஷயத் தொடர்ச்சியிலும் மிகக் குறைவு பட்டும் இருக்கிறது. யாஜ்ஞவல்க்ய நடையதோ மிகவும் சுருக்கமாயும் ஆசார அத்தியாயம் வ்யவஹார அத்தியாயம், பிராயச்சித்த அத்தியாயமென்று மூன்று பிளவு பட்டும், சொல் தொடர்ச்சி நூலமைப்பு முதலியவைகளிற் சிறந்தும் விளங்குகிறது.

ஒவ்வொரு நூலுக்கும் பல ஆசிரியர்கள் உரை எழுதி யிருக்கிறார்கள். அவைகளில் மநுஸ்ம்ருதிக்கு குல்லுகபட்டர் எழுதியிருக்கும் உரையே பெயர் பெற்றது. அதுபோலவே யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதிக்கு, விஜ்ஞானேசுவரயோகிகள் எழுதிருக்கும் "மிதாக்ஷரா" உரையே பெயர் பெற்றது. இவ்வுரையின் பெருமையே பெருமை. 'மிதாக்ஷரா' வென்பதை தமிழில் 'சிற்றுரை' யென்று சொல்லலாம். மனுநாரதர், முதலிய அன்னிய நூல்களிலிருந்து சம பாடங்களெடுத்துரைத்தும், தன் முன் வழங்கிவந்த உரையாசிரியர்களின் மதங்களை எடுத்துக் காட்டியும் அவைகளுக்கு வேண்டும் பொழுது சமாதானம் சொல்லியும் அற்புதமாய் எழுதப்பட்டுள்ளது இவ்வுரை. நான் எழுதிய இவ்வியாசத்திற்கு முக்கிய ஆதாரம் அதுவே. நான் சொல்லப்போவது பெரும்பான்மையும் வ்யவஹாராத்தியாயத்தில் முதல் சருக்கத்தின் மொழி பெயர்ப்பேயாகும்.

ஸ்ம்ருதிகள் அறத்தைப்பற்றிக் கூறுகின்றன. இரண்டாவது வர்ணத்தைச் சேர்ந்த க்ஷத்திரியன் அரசு புரியும்பொழுது நியாயவிவேசனம் அவன் கடமை யென்று யாக்ஞவல்கியர் கூறுகிறார். ராஜ தர்மப் பிரகரணத்தில் அரசன் செய்யவேண்டிய கடமைகளில், நித்தமும், சபையார்களுடன் சேர்ந்து வ்யவஹாரங்களைத் தானே ஆராய்ச்சி செய்ய வேண்டிய தென்று சொல்லியிருக்கிறார்.

அதை ஆதாரமாக வைத்து விஜ்ஞானேசுவரர் சொல்லுகிறார்: "மகுடாபிஷேகம் முதலியன பெற்றுக் குணங்களுடன் கூடிய அரசனுக்கு குடிகளை பரிபாலிப்பது தான் முக்கிய கடமை. புல்லோர்களையடக்கி யல்லாமல் அக்கடமையை நிறைவேற்ற முடியாது. துஷ்டர்கள் யாரென்று அறிவதற்கு, வ்யவஹார ஆராய்ச்சி செய்தே தீர வேண்டும்..........வ்யவஹாரம் எத்தகையது, எத்தனைவிதமுடையது, எப்படி நடைபெறுவது என்பதைப்பற்றி, இது வரை, ஒன்றும், சொல்லப்படாததால், அதை விவரிக்க இரண்டாம் அத்தியாயம் ஆரம்பிக்கப்படுகிறது.

நிருபன் (— மனிதர்களைகாப்பவன் —அரசன்) கோபத்தையும் லோபத்தையும் விட்டுவிட்டு அறிஞர்களான பிராமணர்களுடன்கூட தர்மசாஸ்த்திரங்களில் சொல்லிய வழிப்படி, வ்யவஹாரங்களை, நன்று ஆராயக்கடவன், *(யாஜ்)

எதிரிடையாயும் துணையாயும் சொல்லப்படும் வார்த்தைக்கு வ்யஹார மென்று பெயர். உதாரணமாக ஒருவன் 'இந்த வயல் என்னுடையதென்று சொல்லுகிறான்; மற்றொருவனும், அதற்கெதிராகத் தன்னுடைய தென்று சாதிக்கிறான்.' இவை இரண்டும் வ்யவஹாரங்களென்று பன்மைச் சொல்லால் பலவிதமானது என்பதை விளக்கினார். நிருபன் பார்க்கவேண்டுமென்று உரைத்தால் க்ஷத்திரியனுக்கு மாத்திரமல்ல இந்தக் கடமை. குடிகளின் பரிபாலனத்திற்கு அதிகாரம் பெற்ற எவனுக்கும் உண்டென்று தெளிவாகிறது. வித்வான்களான என்ற மொழியால் வேதம், இலக்கணம், தர்ம சாத்திரங்கள், முதலியவற்றிற் பயின்றவர்களா யிருக்கவேண்டும். துணை நிற்கும் பிராமணர் என்பது ஏற்படுகிறது.

'பிராமணர்களுடன் கூட' வென்று மூன்றும் வேற்றுமைப் பொருளால், அவர்களுக்கு முதன்மையில்லை, ஆதலால் அவர்களுடன் நியாய ஆராய்ச்சிசெய்யும்பொழுது, ஏதாவது தவறு நேர்ந்தால், அதின் குற்றம் அரசனைத்தான் அடையும்; கூடியிருப்பவர்களுக்குக் கிடையாது. அரசன் அந்த சமயத்தில் கோபமும், பேராசையும் அற்றிருத்தல்வேண்டும்.

மேல் கூறிய அந்தணர்கள் அரசனால் நியமிக்கப் பட்டவர்களல்ல. தங்கள் அபிப்பிராயத்தை மீறி அரசன் நடந்தால் அவனை தடுக்க அவர்களுக்கு அதிகாரமில்லை. ஆதலாலும் தப்புத்தீர்ப்பால் வந்த தோஷம் அரசனுக்கேயாம். அரசன் நியாயம் நடத்தும் சபைக்கு அவர்கள் தானகவே சென்றவர்கள். சரியான அபிப்பிராயம் சொல்வதோடு அவர்கள் கடமை முடிவு பெறும். கேட்ட கேள்விக்கு பதில்சொல்லாமலிருக்கவும் கூடாது. மநு சொல்லுகிறார்: சபைக்கே போகாமலிருக்கவேண்டும்; போனால் சரியாக அபிப்பிராயம் சொல்லவேண்டும். அவையிற் புகுந்து, வாய் திறவாமலோ, தவறு சொல்லியோ யிருப்பவன் பாவத்திற்காளாகிறான்.

இப்போது அரசன் நியமிக்க வேண்டிய சிலவர்களைப் பற்றி சொல்லப்படும். அவர்களுக்கு ஸப்யர் அல்லது ஸபாஸதர் என்று பெயர்.—

"அரசன் ஸபாஸதர்களை நியமிக்க வேண்டும். அவர்கள் கேள்வி முறை, படிப்புமுறைகளால் முதிர்ந்த ஞானமுடைய வர்களாயும், தர்மத்தை அறிந்தவர்களாயும், மெய் பேசுகிறவர்களாயும், மித்திரனிடத்தும் பகைவனிடத்தும் ஒரு மனதுள்ளவர்களாயுமிருத்தல் வேண்டும்" (யாஜ்ஞ.)

*"யாஜ்" என்று அடையாள மிடப்பட்டவை, நூலாசிரியராகிய ரிஷியின் செய்யுளெனக்கொள்ள வேண்டும். மற்றது வசனநடையில் தோன்றும் உரை.

நூலாசிரியர் சொல்லியிருக்கும் குணங்களுடைய் ஸபாஸதர்களை, அரசன், தானம், மானம், சத்காரம் இவைகளாற் பிரீதிசெய்து சபையிலிருத்த வேண்டும். 'ஸபாஸதர்கள், என்று பன்மையை உபயோகித்ததால், அவர்கள் மூன்று பெயர்களுக்கு குறையாமலிருக்கவேண்டும். ப்ருஹஸ்பதி மகரிஷி எழு அல்லது ஐந்து அல்லது மூன்று ஸபாஸதர்களிருக்கவேண்டு மென்கிறார்.

முன் சுலோகத்தில் சொல்லபட்ட அந்தணர்களுக்கும் இவ்விடத்திற் சொல்லப்படும் ஸபாஸதர்களுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. இவர்களது அபிப்பிராயத்திற்கு எதிராக அரசன் நடந்தால் அவனையும் தடுக்கவேண்டியது இவர்களின் கடமையாகும். இல்லா விட்டால் பாபத்தை யடைவார்கள். முன் சொன்ன அந்தணர்களுக்குச் சரியான அபிப்பிராயம் சொல்ல வேண்டியது தான் கடமை. அரசனைத்தடுக்க அவர்களுக்கு அதிகாரமில்லை.

ஸபாஸதர்கள் ஆசையும் பகையுமற்றிருக்க வேண்டும். நற்குலம், நல்லொழுக்கம், முதிர்ந்த வயது, செல்வம், பொறுமையின்மை, முதலிய குணங்களுடைய சில வணிகர்களையும் அந்தச் சபையிலிருத்த வேண்டும்.

அரசன் தானாகவே சபையிலிருந்து நியாய விசாரணை செய்யவேண்டும் மென்று முன் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், "வேறு காரியங்களிப்பதால், அரசனுக்கு நேராக நியாய விசாரணை செய்ய முடியாமற்போகுங்கால் சப்யர்களுடன் கூடி தன் ஸதானத்திலிருக்க சகல தர்மங்களையு மறிந்த ஒரு அந்தணனை நியமிக்கவேண்டும். (யாஜ்ஞ)

இவ்விதம் நியமிக்கப்படுபவன் அந்தணனாகவேயிருத்தல் வேண்டும். காத்தியாயன மகரிஷி சொன்ன குணங்களும் அவனிடத்தில் காணப்பட வேண்டும். அவைகளாவன: "ஐம்பொறி யாட்சி, உயாகுலத்திற் பிறப்பு, பக்ஷபாத மின்மை, கொடுமையின்மை, சிதையா நெஞ்சு, மறுமைக் கஞ்சுதல் கோபமின்மை." இத்தகையை அந்தணனில்லாமற் போனாற், க்ஷத்திரியனையோ, வைசியனையே நியமிக்க வேண்டும். இவனுக்கு 'பிராட்விவாகன்" என்று பெயர், இது காரணப் பெயர். பிராட், விவாக என்ற இரண்டு வடமொழிச் சொற்களால் அடங்கியது. வாதியும் பிரதிவாதியும் சொல்கிறதை கேட்கிறான் (ப்ரச்நம் செய்கிறான்) என்றதால் பிராட், அவர்கள் சொற்களிலுள்ள நியாயங்களை சப்யர்களுடன், 'விவேசனம்' அல்லது ஆராய்ச்சி செய்கிறானென்று, 'விவாக' ஆதலால் இருகக்ஷியும் சொல்வதைக் கேட்டு நியாயம் செய்வதால் பிராட் விவாகன் என்ற பெயர் பெறுகிறான்.

பிராட் விவாகன் முதலிய சப்யர்கள் பக்ஷபாதம் முதலிய வற்றால் தர்மத்திற்கு விரோதாய் நியாய விசாரணை செய்தால் அரசன் என்ன செய்யவேண்டு மென்று சொல்லுகிறார்.

"பக்ஷபாதத்தாலாவது, பொன்னாசையாலாவது, பயத்தாலாவது, ஸ்ம்ருதிகளுக் கெதிராக நடக்கும் சப்யர்கள் ஒவ்வொருவரையும் விவாதத்திற் பந்தாயமாய் கூறப்படும் தொகையில் இரண்டு பங்கு தொகை கொடுக்கும்படி தண்டிக்கவேண்டும்."

இந்த தண்டனை, மேற் கூறிய காரணங்களுக்குதான் விதிக்கப்படலாம். அறிவின்மையால் சப்யர் பிழைசெய்தால் அதற்கு தண்டனை கிடையாது.

'தமிழர் நேசன்'

நாணய நிர்வாகங்கள்

வியாபார சௌகரியத்திற்காக வென்று ஏற்பட்ட நாணய நிர்வாக விஷயமாய் இம்மகாயுத்தத்தில் எல்லா தேசங்களும் பல வாறாகக் கெடுதல்களைச் செய்திருக்கின்றன. எல்லா தேசங்களும் யுத்தச் செலவுக்கு பணம் ஸம்பாதிப்பதற்கு காகித நாணயங்களை கணக்கில்லாமல் வெளியிட்டு இருக்கின்றன. அதனால் நாணயங்களின் மதிப்பு குறைந்துபோய், சாமான்களின் விலை ஒரு எல்லைக் கடங்காது ஏறிவிட்டது. தொழிற்சாலைகளில் வேலையாளர் சம்பள ஏற்றத்திற்கு சண்டையிட்டு வேலை நிறுத்தலும், பிறகு சம்பள உயர்வும், தொழில்கள் நீடித்து நடக்க இடையூறுகளும் ஏற்பட்டிருக்கின்றன. அன்னிய தேச வியாபாரம் தடைபட்டிருக்கிறது. வியாபார சௌகரியத்திற்காக ஏற்பட்ட நாணயங்களே இச்சமயத்தில் வியாபார இடையூறுகளாக மாறியிருக்கின்றது. இதனிடையே நாணயமாற்றமே முக்கியதொழிலாகக் கொண்டு பிழைக்கும் பல பாங்குகளும் வர்த்தகர்களும் சுலபமாய் ஏராளமான திரவிய லாபமடைந்திருக்கிறார்கள். எல்லா தேசங்களிலும் சட்டப்படி ஏற்பட்ட நாணயங்களே யில்லாது சுலபமாய் உண்டாக்கப்பட்ட வேறு நாணயங்கள் வழங்குகின்றன. எங்கும் வியாபாரம் படுத்துறங்குகின்றது. பழக்கம் பெற்ற நிபுணர்கள், இக்கதியை சீர்தூக்க வழிதெரியாது வருந்துகிறார்கள். முக்கியமாய் ஐரோப்பா தேசங்களனைத்தும் தவிக்கின்றன. ஜர்மன் நாணயமாகிற மார்க் என்றது வெகுகுறைவான மதிப்பு பெற்றுவருகிறது. ருஷ்யாவில் ரூபிள் என்ற நாணயமும் அவ்வாறே. மற்ற தேசங்களிலும் காகித நாணயங்கள் திரண்டிருக்கின்றன. நம் இந்தியா தேசத்திலோ அரசாங்கத்தார் நாணய நிர்வாகத்தில் நடத்தும் பரீட்சை இன்னும் ஒழிந்த பாடில்லை. வழங்கும் நாணயங்கள் ஒன்று, பெயர்பெறும் நாணயங்கள் ஒன்று, கணக்கிடும் நாணயங்கள் ஒன்றாக யிருக்கிறது. நாளுக்குநாள் நிர்வாக அதிகாரிகளுடைய நோக்கம் மாறியும் வருகிறது. ஸ்திரமாக ஒன்றையும் கருதக் கூடவில்லை. இந்நிலைமையில் இந்நாயணங்ககளைக் கணக்காக வைத்து வியாபாரம் எவ்விதம் நடைபெறும். இந்நாணயங்களில் கணக்கிடுவதை தள்ளிவிட்டு, வேறு ஸ்திரமாயுள்ள எதையாவது கணக்கிட்டு ஏன் இனி வியாபாரம் நடந்தேறக்கூடாது என்று பலர் எண்ணுகின்றனர். ஜர்மனியில் வியாபாரிகள் தங்கள் தேசத்து நாணயங்களின் மதிப்பு மாறுபாட்டைக் கண்டு வெறுத்து அன்னிய தேசநாணயங்களை ஆதாரமாய் வைத்து வர்த்தகம் நடத்திவர யத்தனம் செய்து வருகிறார்கள். நிர்வாக அதிகாரிகள் இதை தடுக்க முயற்சி எடுத்திருக்கின்றனர். இவ்விதக் குழப்பத்தை நோக்குமளவில், இந்நாணய நிர்வாகம் அரசாங்கத்தார் நடத்திவந்தால் உண்டாகும் கேடுகள் வெகு அதிகமென யாவருக்கும் புலப்படாதோ!

புயற் காற்று

ஸ்ரீமான் V. நாராயணய்யர் M.A.M.L. எழுதியது

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அந்நத பாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை ரமேசன் காதலித்ததும், அவனுடைய தகப்பனார் அவனை ஊருக்குக் கூட்டிச்செ

ன்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பிவரும் போது புயற்காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும் அவளும் கல்லியாணகாலத்தில் தன்புருஷன் முகத்தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவன் எனவும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டோபாபுகூர் தாணீ சரணரின் தமையன் மகள் என்றும், வேறுஒருவர் மனைவி என்றும் அறிய,அவளைப்பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியதும், வக்கீல் வேலையில் அமர்ந்து ஹேமநளினியை மறுபடி நாடி கல்லியாணத்திற்கு உடன்பட்டதும; கல்யாண தினமும் குறிப்பிடப்பட்டு,உறவினர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பிய பின்னர், கமலாவை பள்ளிக்கூட விடுமுறை நாளானதால் வீட்டிற்கு அழைத்துப்போக வேண்டுமென்று உபாத்தியாயினியிடமிருந்து கடிதம் அடைய,கமலாவின் கதையை இதுவரை வெளியிடாத இராமேசன் ஒன்றும் தோன்றாது கலங்கி, பிறகு கல்யாணதினத்தை ஒதுக்கிவைக்க அந்நதபாபுவை வேண்டியதும் அவர் அதற்கு கடைசியாக உடன்பட்டு விட்டதும், சென்ற சஞ்சிகைகளிலுள்ள கதை)

இராமேசன் குடியிருப்பதற்காக 'டார்ஜிபாரா' வில் அமர்த்தி யிருந்த வீட்டில் இன்னும் பல மாதங்கள் இருப்பதாக ஒப்புக் கொண்டிருந்ததால் அதை விட்டுவிடவில்லை என்றாலும் தான் அந்நதபாபுவின் வீட்டருகில் வந்து குடியிருக்கும்போது அதை வேறு யாருக்கேனும் வாடகைக்குக் கொடுக்கலாம் என்று அவனுக்குத் தோன்றவில்லை. பணச்செலவை லக்ஷியம் செய்யாத இன்பானுபவமான அதிசய உலகில் அவன்மனம் குடியிருந்தது அல்லவா? இப்பொழுது, கமலா பள்ளிக்கூடத்தினின்றும் திரும்ப வருவதனால் அவளிருக்க ஒரு வீடுவேண்டுமே என்று சூரியோதயத்திலேயே அங்கே புறப்பட்டுப்போய் அறைகளையெல்லாம் குப்பை போகும்படி விளக்கச்செய்து பாய் ஜமக்காள விரிப்புகளை விரித்து சமையல் சாமான்களையும் வாங்கிவைத்து குடித்தனத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான்.

இந்த ஏற்பாடுகளைமுடிப்பதற்கும் கமலாவருவதற்கும் இடையே சற்றுநேரம் அவகாசம் இருந்தது. இராமேசன் மர 'பெஞ்சி'யில் சாய்ந்த வண்ணம் இனிமேல் என்ன நடக்கப்போகிறது என்ற யோசனையில் ஆழ்ந்தான். "இடாவா" விற்கு அவன் போனதில்லை. ஆனால் வடமேற்கேயுள்ள மற்ற ஊர்களைப்போல்தானே அதுவும் இருக்கும் என்று தன்மனதில் ஒருவாறு அந்த ஊரைப் பற்றி நினைத்துக் கொண்டான். விசாலமாய், மரங்கள் இருபுறமுமாய் விளங்கும் பெரிய ரஸ்தாவிற்கருகில் ஊர் நெருக்கத்திற்கு வெளியே ஒரு "பங்களா"வில் குடியிருப்போம்; ரஸ்தாவிற்கு அப்புறம் சாகுபடிக்கு யோக்கியமான பூமி இருக்கும். பயிர்களுக்குத் தண்ணீர் கொடுக்கும் கிணறுகள் ஆங்காங்கு காணப்பட, கவலைகட்டி இழுக்கும் மாடுகளும், சகடைகளின் சப்தமும், காவலாய் நின்று, கதிர்களைக் கெடுக்கவரும் பக்ஷி ஜந்துக்களை யோட்டுபவர் இருக்கும் மேடைகளும்அவன் மனதில் தோன்றின. நிச்சப்தமாய், வெந்து கிடக்கும் காற்றிலே தூளியைக் கிளப்பிக் கொண்டு எப்பொழுதாவது ஒரு "எக்கா" வண்டி அந்த ரஸ்தா வழியே போகும்போதும் இவ்விதமான இடத்தில் பங்காளாவில் வெயிலுக்கு ஒடுங்கி அடைத்துக்கிடப்பவளாய், ஹேமநளினி தான் கோர்ட்டுக்குப்போயிருக்கும்போது தனித்துத் தவிப்பாள் என்று நினைக்கவே, இப்படிகஷ்டப்படும்படி அவளை விதிக்கவேண்டு மென்றால் "கமலா"வின் சகவாசமாவது அவளுக்கு இருக்கவேண்டும். என்று இராமேசன் கருதினான்.

கமலாவிடம் கல்லியாணத்திற்கு முன்பு ஒன்றையுமே சொல்லக்கூடாது என்று இராமேசன் நிச்சயித்தான். பிறகு, ஹேமநளினி, சமயம் பார்த்து கமலாவை மார்புடன் அணைத்துக் கொண்டு அவளுடைய உண்மைச் சரிதத்தை அவளுக்கு வெளியிட்டு, அவளை இவ்விதம் சிக்கவைத்த விதியின் கடூரத்தைப்பற்றி அவளுடைய துயரத்தைப் பெருக்காமல் மெதுவாய் அவளுக்கு அறிவிப்பாள்! அப்போது தன்னூரினின்றும் பிரிந்து உற்றார் உறவினர் மற்ற சிநேகிதர்கள் கண்ணில் படாமல் இருக்கவே, கமலாவும் அவர்களுடன் இருக்க ஒப்புக்கொள்வாள்; இதில் சங்கடங்கள் ஒன்றும் இராது என்று நினைத்தான் இராமேசன்.

மத்தியான வெய்யில் அந்தத்தெருவில் எங்கும் நிச்சப்தமாய் இருந்தது. தொழிலாளிகள் வேலை செய்வதற்கு தொழிற்சாலைகளுக்குப் போய்விட்டார்கள். வேலையில்லாது ஒழிந்தவர்கள் மத்தியானத்தூக்கத்திற்கு தயாராகிக் கண்மூடினார்கள். மழைக்காலம் சமீபித்தது என்று விளக்குவது போல வெய்யிலின் கடுமையும் மட்டுப்பட்டிருந்தது. பூஜை விடுமுறை நாட்களை எதிர்பார்த்து உல்லாசமாக இருப்பதுபோல் எங்கும் காணப்பட்டது. இராமேசன் இவ்விதம் தனக்கு வரப்புகும் சுகத்தைப்பற்றி தியானம்செய்து தன்னிஷ்டப்படி விநோதமாய் மனக்கோட்டைகள் கட்டுவதற்கு ஒன்றும் தடையாக இருக்கவில்லை.

திடீரென, அவனுடைய காதுகள் வண்டிச்சத்தத்தால் சிதறுண்டன. ஒரு பெரிய வண்டி அவன் வீட்டுவாயிலில் வந்து நின்றது. அது கமலாவைக் கொண்டுவரும் பள்ளிக்கூடவண்டி என்று உணர்ந்த இராமேசனின் நாடி படத்தது. கமலாவை எப்படி வரவேற்பது? இருவரும் எதைப்பற்றி சேர்ந்து சம்பாஷிப்பது? அவள் தன்னிடம் எப்படி நடந்து கொள்வாள்? என்ற கேள்விகள் அவன் மனதைக் கலக்கின. மனஅமைதியுடன் அவனால் இருக்க முடியவில்லை. அவனுடைய வேலைக்காரர் இருவர் கீழே காத்திருந்தார்கள். அவர்கள் கமலாவின் பெட்டியை தூக்கிக்கொண்டு மாடி 'வராந்தா'வில் வைத்தார்கள். அவர்களைப்பின் தொடர்ந்து வந்த கமலா வாசற்படியிலே தயங்கி நின்றாள்.

"வா, கமலா" என்றான் இராமேசன். சற்றுத் தயங்கிநின்ற கமலா தைரியத்துடன் அறையுட் புகுந்தாள். அவள் விடுமுறை நாட்களை பள்ளிக்கூடத்திலேயே கழிக்கவேண்டும் என்று இராமேசன் உத்தேசித்திருந்தானே! அவ்விதம் தன்னை சற்றும் கவனியாததுபோலிருந்தது, அவளுக்கு எவ்வளவு வருத்தத்தைக் கொடுத்தது. அப்போது அவள் கண்ணீர் வடித்தது ஞாபகத்திற்கு வரவே, இராமேசனிடமிருந்து வெகுநாள் பிரிந்திருந்ததாலும் அவளுடைய ஆத்திரத்தை ஒடுக்கி லஜ்ஜையுற்று தயங்கச் செய்தது. ஆகவே, கமலா இராமேசனைக் கண்ணெடுத்துப் பாராமல் வாயிற் கதவையே நோக்கி நின்றாள்.

கமலாவைக் கண்டதும் இராமேசன் அதிசயித்து நின்றான்; அவள் புதிய ஆள் போலிருந்தது அவனுக்கு; சில மாதங்களுக்குள் அவ்வளவு மாறுதல்கள் உண்டாயிருந்தன. இளம்செடி வளருவது போல் வளர்ந்திருந்தாள் கமலா; முன்பு முற்றும்

முதிராதிருந்த அவளுடைய அங்கங்களில் விளங்கிய பளபளப்பு இப்போது போய்விட்டது; பட்டிக்காட்டுச் சிறுமிபோன்றல்லாது மாறிவிட்டாள்; அவளுடைய வட்ட முகத்தில் இப்போது மூக்கும் விழியும் விகாசமும் எடுத்துக் காட்டப்பட்டவைபோல் விளங்கின; மழமழ வென்றிருந்த அவளுடைய கபோலங்கள் இப்போது ஒரு மெல்லிய ஒளி தாங்கி அழகுற்றன. அவளுடைய நடையுடை பாவனைகளும் முன்னிருந்த தயக்கத்தைத் தவிர்த்து சுயமாய் அழகுற விளங்கின.

திறந்த ஜன்னலின்முன் சற்று தலையை தொங்க விட்டு நின்ற அவளது முகத்தில் சாயங்கால வெய்யிலின் ஒளி வீசிற்று. அவள் தலையினின்று புடவையின் தலைப்பு விலகியிருந்தது. அவளுடைய கூந்தல் முதுகுற பின்னி விடப்பட்டிருந்தது. அவள் தரித்திருந்த மஞ்சள்ப்புடவை முதிர்ச்சியடைந்து கொண்டிருக்கும் அவளுடைய அவயவங்களின் அமைப்பைக் காட்டுவதுபோல் உடலையொட்டியிருந்தது.

இராமேசன் சற்று நேரம் பேசாமல் அவளை உற்று நோக்கினான்.

சென்ற சில மாதங்களாய் கமலாவின் அழகினுடைய ஞாபகமே மங்கியிருந்தது. அவள் எப்படி இருந்தாள் என்று நன்றாய் அவனுக்கு ஞாபகம் இல்லை. இப்போது இப்படி அதிகரித்த அழகுடன் அவள் தோன்றவே அவள் அழகில் கட்டுப்படாதிருக்கவேண்டும் என்ற நினைவே யில்லாத இராமேசனுடைய மனது தளர்ந்து தத்தளித்தது.

"உட்காரு, கமலா" என்று உத்தரவிட்டான் இராமேசன்; வாய் திறவாமல் உட்கார்ந்தாள் கமலா.

"பள்ளிக்கூடம் எப்படி இருக்கிறது?" எனவே, "சரியாய்த்தானிருக்கிறது" என்று கமலா சுருக்கமாய் பதில் சொன்னாள். மேல் என்ன பேசுவது என்று இராமேசன் தலையைச் சொரிந்து யோசனைசெய்யும்போது ஒரு எண்ணம் உதித்தது.

"நீ சாப்பிட்டு நிரம்பநேரம் ஆயிருக்கவேண்டுமே; அதோ பக்ஷணம் தயாராக இருக்கிறது. இங்கே கொண்டுவரச் சொல்லட்டுமா?"

"வேண்டாம். புறப்படுமுன்தான் சாப்பிட்டேன்."

"இப்போது ஒன்றும் சாப்பிடக்கூடாதா? பக்ஷணம் வேண்டாமென்றால் பழம் இருக்கிறது— ஆப்பிள், மாதளம்பழம், சீமைப் பேரிக்காய்—"

கமலா வேண்டாமென்று தலையை அசைத்தாள். இராமேசன் அவளுடைய முகத்தை உற்றுப்பார்த்தான். தலையை சற்று முன்புற வளைத்து தன்னுடைய ஆங்கிலேய புஸ்தகத்திலுள்ள படங்களைப் பார்த்துக்கொண்டிருந்தாள் கமலா; அழகிய முகம் மந்திரவாதியின் கைக்கழி போன்று சுற்று பதுங்கியிருக்கும் அழகுப் பொருள்களை தன் வயமாக்குவது அல்லவோ? அமர்ந்து ஒளி வீசும் வெந்நிலவு அப்போது அழகிய உருக்கொண்டு விளங்குவது போலிருந்தது; அத்தருவாயில், அந்த சரத்காலப்பொழுது உருவும் அவயவமும்கொண்டு அழகுற்றதுபோல் இருந்தது. சூரியன் கிருகங்களை தன்பால் இழுத்து தன்மயம் ஆக்குவதுபோல் இந்தப் பெண்மணியும் ஆகாயமண்டலம் ஒளி, வெளி, முதலியவற்றையெல்லாம் தன்பால் இழுத்து அழகுறச் செய்து, பாட புஸ்தகத்திலுள்ள புஸ்தகங்களை பார்ப்பவளாய் தன் சக்தியை சற்று முணராது வாய்திறவாமல் வீற்றிருந்தாள்.

சரேல் என்று இராமேசன் வெளியே சென்று உடனே 'ஆப்பிள்' சீமைப்பேரி, மாதளம்பழம் முதலிய பழங்கள் நிரம்பிய தட்டுடன் திரும்ப வந்தான்.

'கமலா, உனக்கு ஒன்றும் வேண்டாம் என்று இருந்தாலும் எனக்குப் பசி அதிகமாய் இருக்கிறது சும்மாவிருக்க முடியவில்லை' என்றான். கமலா புன்னகை புரியவே, அந்த புன்னகையின் இன்னொளியின்முன் அவர்கள் மனத்திடையே திரைபோல் நின்ற பனி விலகிற்று. இராமேசன் கத்தி ஒன்றை எடுத்து ஒரு ஆப்பிளை தோல்சீவி நறுக்க முயன்றான்; ஆனால் அதை சரியாய் நறுக்க அவனுக்கு சாமர்த்தியம் இல்லை; அவசரப்பட்டு கோணலாய் நறுக்குவதைக் கண்டு கமலா தாங்க முடியாமல் வாய்விட்டுச் சிரித்தாள்.

இப்படி அடக்கமுடியாமல் கமலா சிரித்தது இராமேசனுக்கும் சந்தோஷத்தை விளைவித்தது. 'எனக்கு ஆப்பிள் நறுக்கத் தெரியவில்லை யென்று சிரிக்கிறாயே, சரி, எப்படி நறுக்குவது என்று காட்டு பார்ப்போம்' என்றான். 'ஒரு அறுமாமணை இருந்தால் நறுக்கிக்காட்டுவேன்; கத்தியால் எனக்கு நறுக்கதெரியாது' என்றாள் கமலா.

அறுமாமணை இங்கே இருக்காது என்று நினைத்து சொல்கிறாயோ? என்று இராமேசன் வேலைக்காரனைக்கூப்பிட்டுக்கேட்கவே 'இருக்கிறது; சமையலுக்கு வேண்டியவைகளை யெல்லாம் நேற்று இரவே இங்கே கொண்டுவந்து வைத்திருக்கிறோம்' என்று சொன்னான். "சீக்கிரம் அதைக் கழுவி சுத்தம் செய்து கொண்டுவா" என்றான் இராமேசன்.

அறுமாமணை வந்ததும் கமலா உட்கார்ந்து நன்றாய் தோல்சீவி ஆப்பிள்களை துண்டம் துண்டமாய் நறுக்கினாள். இராமேசன் அவள் எதிரில் உட்கார்ந்து கொண்டு துண்டங்களை ஒருதட்டில் ஏந்தினான். 'நீயும் கொஞ்சம் சாப்பிடவேண்டும்' என்றான்.

"எனக்கு வேண்டாம்" என்றாள் கமலா.

"ஆனால், நானும் சாப்பிடமாட்டேன்."

கமலா அவனைக் கண்ணெடுத்துப் பார்த்தாள்.

"அப்படியானால், முதலில் நீங்கள் கொஞ்சம் சாப்பிடுங்கள்; பிறகு நானும் கொஞ்சம் எடுத்துக் கொள்கிறேன்."

"இந்தா அப்புறம் மாட்டேன் என்று சொல்ல மாட்டாயே?"

"இல்லை வாஸ்தவமாய்," என்று உறுதியாய்ச் சொல்லவே, இராமேசன் தட்டினின்றும் ஒரு துண்டத்தை எடுத்து வாயில் போட்டுக்கொண்டான். ஆனால்அவன் வாயை மூடவில்லை; எதையோ கண்டு அப்படியே ஸ்தம்பித்து விட்டான்? யோகேந்திரனும் அக்ஷயனும் மாடியின் வாசற்புறத்தில் அவனெதிரிலே நின்றார்கள்.

முதலில் பேசியது அக்ஷயனே: "மன்னிக்க வேண்டும், இராமேசபாபு; நீர் தனித்திருப்பீர் என்று நினைத்து வந்தோம். இப்படி திடீரென எச்சரிக்கை ஒன்றும் கொடாமல் நாம் வந்திருக்கக்கூடாது, யோகா; நாம் போய் கீழே காத்திருப்போம், வா."

அறுமாமணியை விட்டு திடுக்கிட்டு எழுந்தாள் கமலா; வந்தவர்கள் அவ்வறையினின்றும் வெளியே போகும்வழியிலே நின்றார்கள்; யோகேந்திரன் சற்று விலகி வெளியே போவதற்கு வழிவிட்டு நின்றான்; ஆனால் அவனுடைய கண்கள் மட்டும் அவளுடைய முகட்டைவிட்டு விலகவில்லை. அவளை உற்று நோக்கி விழித்தான். கமலா, வெட்கி மதிகலங்கி அடுத்த அறைக்குள் போய் மறைந்தாள்.

262-ம் பக்கத்தின் தொடர்ச்சி.

ரயில்வே நிர்வாக விஷயமாய்க்கூடிய கூட்டத்தில் அக்கிராஸன பதவியை வஹித்த மாக்னியக் தற்காலத்தில் நடைபெறும் நிர்வாகத்தில் ஜனங்களுக்கு அதிருப்தி இருக்கிறதென்றும், நிர்வாக சம்பந்தமாய் யாதொரு குற்றமும் நிகழவேயில்லையென்றும், வேண்டியது யாதெனில், ரயிலதிகாரிகள் செய்யும் அரிய சௌகரியங்களை விளம்பரப்படுத்த வேண்டுமென்றும் சொன்னார். இவர் ரயில்வே நிர்வாகம் அரசாங்கத்தார் நடத்தினால் சரிவர நடந்துவராதென்றும், செட்டாயும் குறைவில்லாமலும் நடத்த தனிக் கம்பெனிகளே யோக்கியதையுடையவர்களென்றும் கூறுகிறார். நாமோ எளிய பிரயாணிகள் ரயிலதிகாரிகளிடம் படும் அசௌகரியங்களையும், இந்தியர்களுடைய வியாபார முற்போக்குக்கு இவ்வதிகாரிகளால் ஏற்படும் இடையூறுகளை பல சமயங்களில் நேரில்பட்டுத் தெரிந்திருக்கிறோம்.

துருக்கியுடன் போர்செய்யத்தயாராய் செய்தகாரியங்களுக்கு 25 ஆயிரம் பவுன் செலவு ஏற்பட்டிருக்கிறதாம். இச்செலவே யுத்தம் இனி நடைபெறாமலிருக்கவும், சமாதானத்துக்கு துருக்கியர் கீழ்ப்படிந்து வருவதற்கும் உபயோகப்பட்டதாம்; இவ்விதமே மெஸொபொடேமியாவில் சமாதானம் நிகழ்வதற்கு எவ்வளவு செலவு செய்திருக்கிறார்கள். ஈஜிப்டில் தங்கள் செல்வாக்கு முன்னடைவதற்கு எவ்வளவு செலவாயிருக்கிறதோ! பலவாறாக யுத்தம் நிறுத்துவதற்கு யுத்தச்செலவுசெய்துகொண்டே வந்தால் போதும்! இங்கிலைமைக்கு எப்போதாவது ஒய்வுண்டா?

"தமிழ் உலகு."

"தமிழ் உலகு" என்று பெயர் வாய்ந்த வாரப் பத்திரிகை ஒன்று சென்னையில் ஆரம்பமாகியிருக்கிறதாகச் சின்னாள் முன் அறிவித்தோம். பிரதிவாரமும் வரும் அதைத் தொடர்ச்சியாகப்படித்துப் பார்த்ததில், தமிழ் மக்களுடைய அறிவைப்பல துறைகளிலும் வளர்க்க அது முயன்று வருகிறதென்பதில் சந்தேகமில்லை. அதன் ஆசிரியராகிய ஸ்ரீமான் எஸ். பட்டாபிராமன் ஆங்கிலம் கற்று எம். ஏ. பட்டம் பெற்றிருப்பதுடன், தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றவர்; உலக வியவகாரங்களையும் நவீன சாஸ்திரங்களையும் பலவகைச் சரித்திரங்களையும் தமிழர் அறிந்து உயர்வு பெற வேண்டு மென்ற ஆர்வங்கொண்டவர். அவரை ஆசிரியராகக் கொண்ட "தமிழ் உலகு" தனது லட்சியங்கள் நிறைவேறத்தக்க வழியில் ஊழியம் செய்யுமென்பது நிச்சயம். இது வரையில் வெளி வந்துள்ள மூன்று வாரப் பத்திரிகைகளிலும் சில வியாசங்களைச் சிறப்பாகக் குறிப்பிடுவது தகும். பூமியின் பிறப்பு, நேஷன், மீரா பாய் சரித்திரம் ஆகியவைகளைப் பற்றிய வியாசங்கள் புது அறிவைத் தமிழருக்கு அவர்கள் அறியக் கூடிய நடையில் புகட்டுவனவாயிருக்கின்றன இந்தப் பத்திரிகை தழைத்து தனது கருத்து நிறைவேறப் பெறுமாறு கடவுள் கருணை பொழிய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

சுதேசமித்திரன்.

துப்பறியும் நாவல்கள்

ஆரணி குப்புசாமிமுதலியார் (எழுதியது)

	ரூ.	அ.
இந்திராபாய் ...	2	8
அல்லது இந்திரஜாலக் கள்வன்		
சுந்தரசிங் ...	1	8
அல்லது பாஸ்கரவிலாஸ் படுகொலை		
அம்புஜாக்ஷி ...	2	0

வி. நாராயணன் கம்பெனி,

4, கொண்டிசெட்டி தெரு, மதராஸ்.

பரத நாட்டின் நிலைமை.

பொன்விளையும் பூமியெனவும், கற்பக நாடெனவும் புகழ்ப்பெற்றுப் பலவகை ஏற்றமும் இயற்கை வளமும் வாய்ந்த நம் நாடு இக்காலத்திலே சீரும் சிறப்புமற்று, பரிகாசத்துக் கிடமாய்விட்டது ஒரு புறமிருக்க, உலகனைத்திற்கும் உணவளித்த நம்மவர், புசிக்க வகையின்றியும், கூலிக்கு வேலையின்றியும் கூக்குரலிடும்படியான நிலைமை நேர்ந்திருக்கிறது. இத்தகைய இழி நிலைமைக்குக் காரணம் யாதென்பதற்குள்ள விவரங்களையும், இழி நிலையை நீக்கி, முன்போல் உயர்பதம்பெற்று ஒப்புயர்வற்று வாழ்வதற்கான வழிகளையும், இச் சிறு நூலிலே பரக்கக் காணலாம். ராஜிய விஷயத்தில் உயர் நிலைமையெய்துமுன், செல்வ நிலையில் உயர்நிலை எய்த முனைய வேண்டும். ஆதலின் தேசச்செல்வ நிலையை நம் சிறுவரும் சிறுமியரும் ஜன சமூகத்தினரும் நன்குணர்ந்து, தேசத் தொழிலை விருத்தி செய்து, வியாபாரத்தைப் பெருக்கி செல்வச் சிறப்புற்றுச் சுகவாழ்வு வாழ்வதற்கான காரியங்களில் முனையவேண்டு மென்பதே இந்நூலின் நோக்கமாகும். விலை ரூபா. 1—0—0

ஆரிய சரித்திரம். நீதிக் கதைகள்.

சுமார் 300-பக்கங்கள் உள்ளது; சித்திரப்படங்களும் அமையப்பெற்றது; நான்காம்பதிப்பு. தெளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு, உயர்ந்த கடிதத்தில் பெரிய எழுத்துக்களால் அச்சடிக்கப்பட்டு அழகாய்ப் பயிண்டு செய்யப்பட்டுள்ளது.

விலை ரூபா. 1—0—0

கணேஷ் கம்பெனி,

39, தம்புசெட்டித் தெரு, சென்னை.

புத்தக விளம்பரங்கள்.

சுதேசமித்திரன் புத்தகசாலை.

உதயலன்.

என்கிற சொற்கைச் சிங்களவன்.

ஷேக்ஸ்பியர் மகாகவி ஆங்கிலபாஷையில் எழுதியுள்ள "ஒதெல்லோ என்கிற வெனிஸ் மோரியன்" என்னும் ஓர் அருமையானநாடகம். அ. மாதவையா அவர்கள் மொழிபெயர்த்தமைத்தது. விலை அணா 12.

பத்மாவதி சரித்திரம்.

ஸ்ரீமான் அ. மாதவய்யா, பி.ஏ., எழுதிய அருமையான நாவல். புதிய பதிப்பு 10. படங்களுடன் கூடியது. இந்நூல் அலங்காரமாய் அநேக பழமொழிகளை அணிந்து சில மதுரமான கவிகளை உள்ளடக்கி, சிறுவர் சிறுமிகளும் எளிதிற் படித்தறியும்படியான தமிழ் நடையில் உள்ளது. விலை ரூ. 2.

வர்த்தகயுக்தி.

வியாபார சம்பந்தமான விஷயங்கள் கொண்டது. ஒவ்வொரு தொழிலாளியும் அவசியம் படிக்க வேண்டிய நூல். இதனை மெச்சிப் புகழாத பத்திரிகைகள் கிடையா. முதற் பதிப்பு விளம்பரமின்றி விற்பனை. இரண்டாம் பதிப்பு பத்திரிகையில் விளம்பரம் செய்த ஒரு வாரத்துக்குள் விற்பனை. இது நான்காம் பதிப்பு. விலை அணா 6.

கதாமாலிகா.

இது ஒரு கதைக் களஞ்சியம்.

வி. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய விநோதக் கதைகளும், விசித்திரங்களும், பொதிந்து கிடக்கின்றன. கதா விநோதம், 33-விஷயங்கள் அடங்கியிருக்கின்றன, விலை ரூபா 1.

பாமாலை.

இராமலிங்க ஸ்வாமிகள், மாணிக்க வாசகர் முதலியோர் திருவாய்மலர்ந்த சில அற்புத பாடல்களை, ஒரு பெரியார் தொகுத்தபடி அச்சிடப்பட்டிருக்கிறது. கோயம்பத்தூர், திருநெல்வேலி ஜில்லாக்களில் பிரதிவாசந்தோறும் படிக்கும் பக்த சிரோமணிகளுக்கு இந்நூல் மிகவும் உபயோகமானது. விலை அணா 4.

சிறைவாசஞ் செய்யும்

கிருஷ்ணஸவாமி சர்மா

அவர்களால் எழுதப்பட்டது.

	ரூ.	அ.
மகாத்மாகாந்தியின் குரு, டால்ஸ்டாய்	0	4
பண்டித மோதிலால் நேரு	0	2
மகாத்மா காந்தி	1	8
சித்தரஞ்சன தாஸ்	0	12
முஹம்மத் அலி, ஷவுகத் அலி	1	0
ஸ்வராஜ்யம்	0	8
லாலாலஜபதிராய்	0	8
சிவாஜி	1	0

திக்கற்ற இருகுழந்தைகள்.

இந்த நாவல் பெரியதாயும் வாசிக்கும் போது மடிக்ளர்ச்சி புண்டாக்ககூடியதாயுமுள்ளது. இன்பச்சுவை மிகுந்து மகளிர் வாழ்க்கையிற் படிப்போர் யாவருக்கும் அனுதாபமும் ஒற்றுமை புணர்ச்சியும் விளையும்படி செய்கின்றது. இது யாவருக்கும் விளங்கும் எளிய நடையில் எழுதியது. படிக்கப் படிக்க மேன்மேல் மனதைக் கவரும் இனிய கதைப்போக்கையும் நன்கறிந்து கொள்ளலாம். விலை ரூ. 1-8.

மானேஜர், சுதேசமித்திரன்,

சென்னை.

"தமிழ் உலகு"

சென்னை மைலாப்பூரிலிருந்து ஸ்ரீமான் எஸ். பட்டாபிராமன், எம்.ஏ. அவர்களால் வெளியிடப்பட்டு வரும் இவ்வாரார்ந்தத் தமிழ்ப் பத்திரிகையைப்பற்றி நமது அபிப்பிராயத்தை ஏற்கனவே வெளியிட்டிருக்கிறோம். மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அனுமதி கொடுத்திருக்கிறார். அவருடைய புத்தகங்களின் உரிமையை வகித்து வரும் மாக்மிலன் கம்பெனியாரும் இதற்கிணங்கி இருக்கின்றனர். 'சித்திரா'வென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. மொழி பெயர்ப்பில் மகாகவியின் ஆழ்ந்த கருத்து பின்னப்படாமலிருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது. பக்கங்களும் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. பல விஷயங்களைப்பற்றிய வியாசங்கள் வெளியாகின்றன. தாய்பாஷையை அபிவிருத்திசெய்வதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு இப்பத்திரிகையை அன்னார் நடத்திவருவதால் தமிழ் நாட்டினர் இதனை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்களென்பதை நாம் கூறத்தேவையில்லை.

சுதேசமித்திரன், 16—8—1922

தமிழ் உலகு.

(THE TAMIL WORLD)

ஞாயிற்றுகிழமை தோறும் வெளிவரும்

தமிழ் வாரப் பத்திரிகை

பத்திராதிபர், S. பட்டாபிராமன் M. A.

சந்தா விவரம்:—

உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம் 3 0 0	-வருஷம் 3 8 0
1-வருஷம் 5 0 0	1-வருஷம் 6 0 0

எளிய நடையில் எழுதப்பட்டது; பாமரர்களுக்கும் பண்டிதர்களுக்கும் ஒருங்கே உதவுமாறு பலவிதமான பொருள்கள் அடங்கியது ; பிரதிவாரம் லௌகிக விஷயங்களைப்பற்றிய குறிப்புகளும் வியாசங்களும் சரித்திர சம்பந்தமான விஷயங்களும் சாஸ்திர ஆராய்ச்சிக் குறிப்புகளும் சிறு கதைகளும் வேறு பலவிதமான பொருள்களும் அடங்கியது. மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அனுமதி கொடுத்திருக்கிறார். 'சித்திரா' வென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் "புயற் காற்று" இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில்மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

ஆகவே, தமிழைப் பாராட்டவேண்டும், தமிழர் முற்போக்கு அடைதல் வேண்டும் என்பவர் யாவரும் வாங்கி வாசிக்கத்தக்கது.

விளம்பர விகிதம் :— சென்னை மைலாப்பூர், 16, பசுபதி அக்கிரஹாரம் "தமிழ் உலகு" மானேஜருக்கு எழுதி யறிந்துகொள்ளவும்.

சுதேசியமானது ! உபயோகமுள்ளது ! !

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் டி. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' காரியாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.